07.04.2026 OS.No.259/2021 PW2 Name :.பாப்பையன்

குறுக்கு விசாரணை

1. பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி என்னுடைய அத்தை மகள் ஆவார். அவர் அழைத்தன்பேரில் தான் வழக்கில் சாட்சியம் கூறுகிறேன். 1ம் பிரதிவாதி வாதியின் அண்ணன் உறவு ஆவார். வேலு எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. வேலுவிற்கு மனைவி நீலா, பிள்ளைகள் பிரேமலதா, சரளா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தின் சர்வே எண். 545/1 விஸ்தீரணம் 1.42. அதற்கு வடக்கில் ரோடும் கிழக்கில் இளங்கோ சொத்தும் தெற்கில் தங்கராஜ் சொத்தும் மேற்கில் வங்கி மேலாளலர் சொத்தும் உள்ளது.
2. அதை யாரிடமிருந்து எந்த வருடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. கிரைய ஆவண எண் எனக்கு தெரியாது. 3வது அயிட்ட சொத்து திருப்பதி கவுண்டர் கிரையமாக வாங்கினார். அதன் சர்வே எண், செக்குபந்தி, பட்டா எண் தெரியாது. 2வது அயிட்ட சொத்து காளியம்மாளுக்கு அவருடைய கணவர் மூலமாக சொந்தம். அதன் ஆவண எண் எனக்கு தெரியாது. திருப்பதி கவுண்டர் உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு அனைத்து சீர்வரிசையுடன் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் தவறாகும்.
3. வாதிக்கு திருமணமாகி சுமார் 25 ஆண்டுகள் ஆகிறது. அவருடைய கணவர் அதே ஊரை சார்ந்தவர். அவருக்கு 2 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. வாதிக்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளார்கள். அவர்கள் திருமணமாகி கணவருடன் வசிக்கிறார்கள். தாவா சொத்தில்

அவர்கள் கூட்டாக இருக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.

4. திருப்பதி கவுண்டர் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் இறந்துள்ளார். காளியம்மாள் இறந்து சுமார் 20 ஆண்டுகள் ஆகிறது. 1 முதல் 5 பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் தவறாகும். வாதி 1/3 பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளார். வாதி கணவரை பிரிந்து வாழ்கிறார் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கூரை வீட்டில் 1ம் பிரதிவாதி தான் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. 1 முதல் 5 பிரதிவாதிகள் சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

5. பஞ்சாயத்து செய்த ஊர் பெரியோர்கள் தற்போது உயிருடன் இல்லை. வழக்கு சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தான் பயிர் செய்கிறார்கள் என்றால் தவறு. வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பயிர் செய்ய வாதி எவ்வளவு பண உதவி செய்தார் என்றால் அவர் உழைத்து பயிர் செய்து கொடுத்தார். அவருடைய நிலத்தில் அவர் பயிர் செய்துள்ளார். வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 07/04/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,VANIYAMBADI
Digitally signed by RAJA B
DN: cn=RAJA B, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR DISTRICT.
Date: 2026.04.07 17:52:37 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.